மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்க முடியாது. நீங்கள் நினைத்த நேரத்திலே வாய்ப்புக் கொடுக்க முடியாது.

மாண்புமிகு திரும்தி பா. வளர்மதி: சூர்ப்பனகை, இராவணன், இந்திரஜித் ஆகியோர்தான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுந்து நின்ற நேரத்தில், எல்லாம் தொழுவம் கட்ட முடியாது. உட்காருங்கள். அமைச்சர் பதிலுரையை முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: நல்லவேளை, துரியோதனனும், துச்சாதனனும் தப்பித்தார்கள். விட்டால், இலங்கையில் இராவணன் பேரன்தான்..... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: இலங்கையில் இராவணன் பேரன்தான்.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள்; பேசுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-40

7. அரசினர் தீர்மானம்

உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களோடு சண்டை போடுவது, பேரவைத் தலைவர் அவர்களையே மிரட்டுவது என்ற பாணியை, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கின்ற முறை கண்டிக்கத்தக்கது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தக்க நடவடிக்கையை, பேரவைத் தலைவராகிய, நீங்கள் எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி அவர்களே, என்னைச் சீண்டிப் பார்க்காதீர்கள். நீங்கள் கிண்டல் பண்ணுவதுபோல், நான்

2002 ஏப்ரல் 26]

திரும்பக் கிண்டல் பண்ணினால், உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் தூக்கமே பிடிக்காது. ஆண்டுக் கணக்கில் தூக்கம் பிடிக்காது. உட்காருங்கள், என் தலைமைக்கு கட்டுப்பட்டு, இந்தப் பதவி, பொறுப்புக்குக் கட்டுப்பட்டு, நான் அமைதியாக இருக்கிறேனே தவிர, என்னைச் சீண்டாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களை மிரட்டுவதும், விரட்டுவதும், எதிர்ப்பதும் என்ற பாணியை, அச்சுறுத்துகிற பாணியை மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர், அவையினுடைய நடவடிக்கையைத் தொடர்ந்து தடுத்து வருகின்ற காரணத்தால், அலுவல்கள் நடத்துவதற்குத் தடையாக இருக்கின்ற காரணத்தால், அவைத் தலைவரை, தொடர்ந்து கொச்சைப்படுத்தி, கேவலமாகப் பேசிக்கொண்டும், மிரட்டிக் கொண்டும் வருகின்ற காரணத்தால், 'அவரை அவையை விட்டு எஞ்சிய நாட்களுக்கு நீக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. பரிதி இளம்வழுதி: இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையுள்ள எஞ்சிய நாட்களுக்கு அவையை விட்டு நீக்கப்படுகிறார். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், அவரை அவையை விட்டு வெளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி, அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. புகழேந்தி, நான் உங்களுக்குரிய வாய்ப்பு எதையும் மறுக்கவில்லை. அமைச்சர் அவர்கள் பேசிக்

கொண்டிருக்கிறபோது, இரண்டு, மூன்று முறை நீங்கள் குறுக்கீட்டீர்கள். உங்களைப் பேச அனுமதித்தேன். திரு. பொன்முடி பேச விரும்பினார். குறுக்கிடுவதற்கு அனுமதித்தேன். நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள். உங்களுடைய தலைவர் எழுதிய கவிதையை அமைச்சர் வாசித்துக் காட்டினார். நீங்கள் பதிலுக்கு ஒரு பதிலுரை சொன்னீர்கள். அந்தப் பதிலுரையும்கூடக் குறிப்பேட்டில் இருக்கட்டும் என்று அனுமதித்தேன். இத்தனைக்குப் பிறகும், வீணாக என்னிடத்திலே எதற்காகச் சண்டை போடுகிறீர்கள்? எதற்காகத் தேவையில்லாமல் வம்பு வளர்க்கிறீர்கள்? என்னுடைய தலைமைக்குக் கட்டுப்பட்டு, இந்தப் பதவி, பொறுப்புக்குக் கட்டுப்பட்டு, நான் முடங்கிப் போயிருக்கிறேன். என் சுய சொரூபம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது இப்போது சொல்லப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்ப்பின்படி நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நான் தீர்ப்பின் உள்ளே போகவில்லை. ஆனால், எதுவாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சோ அல்லது அவர் சொல்லியிருந்த வார்த்தைகளோ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. புகழேந்தி, பலமுறை எச்சரித்தாகி விட்டது. (குறுக்கீடு) பலமுறை எச்சரித்தாகி விட்டது. அன்றைக்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டாகி விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதலமைச்சர் அவர்கள், எஞ்சிய கூட்டத் தொடர் என்பதையெல்லாம் நீக்கி, ஒருநாள் மட்டும் என்று மாற்றுங்கள் என்று சொன்னார்கள். அவருடைய பெருந்தன்மையை ஏற்றுக்கொண்டு, நானும் அனுமதித்தேன். மறுபடியும் அதே பாணியில் கிண்டல் பண்ணுவது, கேலி பண்ணுவது என்பது முறையற்றது. (குறுக்கீடுகள்)

திரு. பரிதி இளம்வழுதி, லாபியிலே இருந்துகொண்டு குழப்பம் செய்வதுபோல் தெரிகிறது. அங்கே இருந்தும் அவரை நீக்க வேண்டுமென்று அவைக் காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....